**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No.119 /2009**
**U/s. 461,468,471,465,466,120(b),420r/w 511 IPC**
**PROSECUTION WITNESS NO. 11 (LW. 14)**

| | | |
|---|---|---|
| **Name** : திரு. தமிழ்செல்வன் **(IO)** | | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address :** | **Age : /2025** |

**1,2** எதிரிகள் ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா , நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 119/2009 10.02.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 4.15 AN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் கடந்த 31.03.2018 ம் தேதி தஞ்சை நகரத்தில் காவல்துணை கண்காணிப்பளாராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றேன். கடந்த 20.11.2006 ம் தேதி தஞ்சை நகர கிழக்கு காவல்நிலைய குற்ற எண் 140/2006 சட்டபிரிவுகள் 120(b),420,466,468,474 இதசவின்படி வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துகொண்டேன். கடந்த 17.03.2006 ம் தேதி காலை 10.45 மணிக்கு தஞ்சை கிழக்கு காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்த ரவிசந்திரன் என்பவர் தஞ்சை நீதித்துறை நடுவர் எண் 1 அவர்கள் மூலம் கிடைக்க பெற்ற முகமது பரூக் என்பவர் கொடுத்த புகார் மனுவினை நகாஎண் 106 தேதி 08.02.2006 என்பதனை பெற்று தஞ்சை கிழக்கு காவல்நிலையத்தில் குற்ற எண் 140/2006 வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. **முதல் தகவல் அறிக்கை அசாஆ 33 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்பு தஞ்சை மாவட்ட அலுவலக ஆர்சி எண் C2/11309/2006 தேதி 10.04.2006 ன் படி தஞ்சை கிழக்கு காவல் நிலைய குற்ற எண் 140/2006 என்ற வழக்கு கோப்பினை மாவட்ட குற்ற பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டது. **மாற்றம் செய்யப்பட்ட செயல்முறை ஆணை அசாஆ 34 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு குற்ற பிரிவு காவல் ஆய்வாளராக இருந்த திரு. மெய்ஞானம் திரு. ராமலிங்கம் திரு. பத்மநாபன் ஆகியோர் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர். கடந்த 20.11.2006 ம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேர்முக உதவியாளராக இருந்த திரு. பொ .சங்கர் என்பவரை விசாரித்து அவர் SLR பதிவேட்டிலிருந்து வழங்கிய தபாலை பெற்று அதை வைத்து விசாரித்து வாக்குமூலம் பெற்றேன்.

3. பின்பு கடந்த 29.11.2006ம் தேதி சென்னை சேப்பாக்கம் தொழில்நுட்ப மேலாளர் மாநில நில அளவை அலுவலகம் திருமதி. சுடலையம்மாள் என்பவரை

விசாரித்து இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட அவ்வலுகத்திலிருந்து பெறப்பட்டதாக கூறப்பட்ட பதிவுகளை காண்பித்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சுடலையம்மாள் அவர்கள் அனுப்பி வைத்த கடிதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 25.10.2008 ம் தேதி இவ்வழக்கின் வாதியான முகமது ப்ரூக் என்பவரை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 5.11.2008 ம் தேதி தஞ்சை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் உதவியாளர் திரு. கென்னடி அவர்களை CP 2900 சான்றின் நகல்களை பெற்றது சம்மந்தமாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 3.12.2008 ம் தேதி தஞ்சை நோட்டரி பப்ளிக் திரு. அன்பரசன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் கிராம நிர்வாக அலுவலரான திரு. ஜார்ஜ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரிகள் நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றனர்.

4. பின்பு எனக்கு முன்னால் புலன் விசாரணை செய்த திரு. ராமலிங்கம் அவர்கள் **ஆவணத்தின் உண்மை தன்மை கோரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும் சென்னை மத்திய நில அளவை அலுவலகத்திற்கும் அனுப்பிய கடிதங்கள் அசாஆ 35 , அசாஆ 36 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வக்பு வாரிய கண்காணிப்பாளர் திரு. மீரான் மொய்தீன், நகராட்சி ஆணையருக்கு எழுதிய கடித நகல் அசாஆ 37 , திரு. இஸ்மாயில், திரு. முகமது பாரூக் இருவரும் வக்பு வாரிய கண்காணிப்பாளருக்கு கொடுத்த கார்பன் நகல் அசாஆ 38, திரு. இஸ்மாயில் திரு. முகமது பாரூக் இருவரும் ஆவணங்களை ஆஜர்படுத்தியதற்கான கடிதம் வக்பு கண்காணிப்பாளரின் ஏற்பளிப்பு செய்யப்பட்டது அசாஆ 39 ஆக குறியீடு செய்யப்படுகிறது(அசாஆ 37,38,39 ஆவணங்கள் எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. )**

**5.** பின்னர் இவ்வழக்கின் எதிரிகளான முகமது சாலியா , முகமது ஷபி, முகமது ஷெரிப் ஆகியோர்கள் பிரிவு 120(b),420,466,468,474 இதசவின்படி 18.12.2008ம் தேதி குற்ற பத்திரிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

**1.** இவ்வழக்கானது எதற்காக எதிரிகள் மீது தாக்கல் செய்யப்பட்டது என்றால் மேற்படி இடத்தினை குற்றமுறு நோக்குடன் கைப்பற்றியதற்காக அவர்கள் மீது வழக்கு போடப்பட்டது. அதற்கான ஆவணங்களை பரிசீலனைக்கு எடுத்து கொண்டேனா என்றால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்ட கடிதங்களும் மத்திய நில அளவை அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் மற்றும் நீதிமன்றங்களில் தாக்கல் செய்திருந்த ஆவணங்களில் நகல் ஆகியவற்றிலிருந்து முடிவு செய்யப்பட்டது. மாவட்ட ஆட்சியர்

அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட கடிதங்கள் குறித்து கூறமுடியுமா என்றால் ந.மா.6/06/ஆ2 ந,மா9/06/ஆ2 நாள் 10.02.2006. திரு. சங்கர் அவர்கள் அந்த ஆவணத்தை வழங்கினார். எதிரிகள் பயன்படுத்தியதாக கூறப்படும் ஆவணங்கள் எது என்று தெரியுமா என்றால் தமிழ் நாடு வக்பு வாரியத்திற்கு சொந்தமான இடம் என்று சொல்லப்படுவதற்கான ஆவணம். அது சம்மந்தமாக வக்பு வாரிய கண்காணிப்பாளர் , முதன்மை நிர்வாக அதிகாரி ஆகியோர்களை விசாரித்தேனா என்றால் வக்பு வாரிய நான் நேரடியாக விசாரணை செய்யவில்லை சம்மந்தபட்ட இடம் வக்பு வாரியத்திற்கு சொந்தமானது இல்லை என்று கடிதம் மூலமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. SLR என்பது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தால் கொடுக்கப்பட்ட ஆவணம் அதை தவிர அதற்கு முந்திய ஆவணங்கள் எதையும் பார்க்கவில்லை. மேற்படி கூறப்பட்ட வக்பு வாரிய அலுவலக கடிதத்தை தவிர மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சம்மந்தப்பட்ட அதிகாரிகளை விசாரிக்கவில்லை என்றால் நேர்முக உதவியாளர் மாவட்ட ஆட்சி அலுவலகம் திரு. சங்கர் மற்றும் தலைமை உதவியாளர் பிரேமகுமாரி ஆகியோர்களை விசாரித்துள்ளேன். இந்த வழக்கை பொருத்தவரை எதிரிகளின் கோரிக்கை இந்த இடம் சந்தா உசேன் என்ற வக்புக்கு சொந்தமான இடம் மற்றும் தனது அனுபவத்தில் உள்ளது என்று எதிரிகள் கூறுகிறார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கை பொருத்தவரை எதிரிகளை நேரடியாக விசாரித்தேனா என்றால் நான் விசாரித்ததாக ஞாபகமில்லை. எனக்கு முன்பு புலன் விசாரணை செய்த அதிகாரிகள் எதிரிகளை நேரடியாக விசாரித்தார்களா என்றால் வழக்கு கோப்பில் அதற்கான பதிவுகள் இல்லை. எதிரிகள் மேற்படி இடம் தங்களுக்கு சொந்தமானது என ஆவணங்கள் கொடுத்தார்கள் என்றால் அவர்கள் ஆவணங்கள் கொடுத்தார்களா என்பது தெரியாது. மேற்படி ஆவணங்கள் நீதிமன்றம் மூலமாக பெற்றுதான் ஆவணங்களின் உண்மைதன்மை பற்றி திரு. சங்கர் திரு. சுடலையம்மாள் அவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

3. இந்த சொத்து வக்புக்கு சொந்தமான சொத்து என்பது தான் அவர்களின் கோரிக்கை என்றால் சரிதான். வக்பு சொத்துகளை பொருத்தவரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பிற்படுத்தபட்டோர் துறை மற்றும் வக்புக்கு சம்மந்தமான துறை ஆகியன மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்குகிறது என்றால் சரிதான். வக்பு சொத்துகளை பொருத்து சான்றுகள் எதுவும் வழங்கவேண்டும் என்றால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள வக்பு மற்றும் பிற்படுத்தபட்டோர் துறை அதிகாரிகள் தான் வழங்கவேண்டும் என்றால் சரிதான். பொய் சான்று கொடுத்தாக கூறப்படும் நிகழ்வுகள் நடைபெற்றதாக 2004 என்றால் சரிதான். எங்களிடம் குற்றம் சாட்டப்பட்டது 2006ஆகும். 2004

சமயத்தில் பிற்படுத்தபட்டோர் மற்றும் வக்பு துறைக்கு சம்மந்தப்பட்ட அலுவலர் திரு. முகமது இஸ்மாயில் இருந்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் மாவட்ட பிற்பட்டோர் அலுவலகத்தில் பெறப்பட்ட கடிதம் கண்காணிப்பித்தீர்கள் அந்த கடிதத்தில் வரிசை எண் 3ல் திரு. S முகமது இஸ்மாயில் 21.03.2003 முதல் 23.08.2004 வரை பதவி காலத்தில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. வக்பு சொத்து சம்மந்தமாக Resettlement register பதிவு சான்று என்பது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அப்போது பிற்படுத்தபட்ட மற்றும் வக்பு சம்மந்தப்பட்ட துறை அலுவலராக இருந்த திரு. S. முகமது இஸ்மாயில் என்பவரால் வழங்கப்பட்டது (அசாஆ 7) என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.இது சம்மந்தமாக அந்த துறை சம்மந்தப்பட் மாவட்ட பிற்பட்டோர் அலுவலகத்தில் உள்ள அதிகாரிகளை விசாரித்தீர்களா என்றால் இல்லை.2000ம் ஆண்டுக்கு முன்பே அதே S. முகமது இஸ்மாயில் என்பவர் தஞ்சை மாவட்ட முழுவதும் உள்ள அனைத்து வக்புகளின் சொத்துகள் மற்றும் அவைகளை பற்றிய ஆக்கிரமிப்பு உள்ளதா என்று நில அளவை செய்து அறிக்கை தாக்கல் செய்ய துணை நில அளவை ஆணையராக மாநில அரசால் நியமிக்கப்பட்டார் என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எங்களது விசாரணையில் அசா1 மற்றும் அசா2 நபர்கள் வழக்கு சொத்தை ஒரு செட்டியார் வகையாரவிடம் இருந்து வாங்கப்பட்டது என்று கூறியுள்ளரார்கள் என்றால் சரிதான்.

5. அந்த அசா1 அசா2 விற்பனை செய்த செட்டியார் வகையாராவிற்கு எப்படி அந்த சொத்து கிடைத்தது என்பது விசாரிக்கவில்லை என்றால் சரிதான். செட்டியார் வகையாறா இந்த வழக்கு சொத்தை வக்பு சொந்தமான சொத்தை ஏலம் போட்டதாக காட்டி தான் பெற்றுள்ளார் என்பது பற்றி எனது விசாரணையில் தெரியவில்லை. மோசடி ஆவணத்தை யார் தயாரித்தது எங்க தயாரிக்கப்பட்டது என்பது பற்றி எதுவும் விசாரித்தீர்களா என்றால் விசாரணை செய்ததில் எதிரிகள் பயன்படுத்தியது மட்டும் தான் புலன் விசாரணையில் தெரிந்து கொள்ளப்பட்டது.இவ்வழக்கில் மோசடி செய்யப்பட்டதாக சொல்லப்படும் ஆவணங்கள் யாரால் எப்படி தயாரிக்கப்பட்டது என்பதை தெரிந்து கொண்டால் தான் அது மோசடி ஆவணமா இல்லை என்று தெரியவரும் என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் அசா1 அசா2 சாட்சியத்தை வைத்து கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் குற்ற எண் 140/2006 எத்தனை நபர் மேல் போடப்பட்டுள்ளது என்றால் 6 நபர்கள் மீது போடப்பட்டுள்ளது. அவர்கள் முகமதுஷெரிப், முகமது ஷபி, அம்பிகாபதி, முகமதுஉசேன், மீரான் மொய்தீன், கலீல் இப்ராகிம். இவ்வழக்கின் எதிரிகளை தவிர மற்ற நபர்களை ஏன் இறுதி அறிக்கையில்

சேர்க்கவில்லை என்றால் அவர்கள் மீது குற்றமுறு மோசடி இல்லை என்பதால் அவர்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை. மீரான் மொய்தீன், கலீல் இப்ராகிம் அவர்கள் இருவரும் வக்பு வாரிய அதிகாரிகள் என்றால் சரிதான். அசா1 கொடுத்த புகாரில் மீரான் மொய்தீன், கலீல் இப்ராகிம் ஆகிய இருவரும் வந்து தவா இடத்தை அளக்க வந்தார்கள் அதனால் அவர்களையும் எதிரிகளாக முதல் தகவல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசாஆ 37 வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட வக்புக்கு சொந்தமில்லை என்று கண்டுள்ளது . அசா1, அசா2 ஆகியோரின் பரிந்துரையின் பேரில் மீரான் மொய்தீன் கலீல் இப்ராகிம் ஆகியோர்கள் நீக்கப்பட்டார்கள் என்றும் அதற்கு காரணம் அவர்கள் கொடுத்த அசாஆ 37 ல் கூறப்பட்டுள்ளதுதான் என்றால் சரியல்ல.

6. அம்பிகாபதி, முகமதுஉசேன் ஆகியோரும் நிலஅளவை செய்ய வந்தபோது சேர்ந்து தான் பிரச்சனை செய்தார்கள் என்றும் அதனால் தான் அவர்களை சேர்த்து புகாரில் கூறப்பட்டுள்ளது என்றால் அந்த புகாரில் எதிரிகள் 1,2க்கு மோசடி ஆவணம் உருவாக்க பக்கதுணையாக இருந்ததாக கூறியுள்ளார்கள். அசா1,அசா2 பரிந்துரையின் பேரில் அம்பிகாபதி, முகமதுஉசேன் இருவரையும் நீக்கிவிட்டு குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து சந்தா உசேன் வக்புக்கு சொந்தமான சொத்து என்பதால் தான் அது மோசடியாக போய்விட கூடாது என்பதற்காக முறையான ஆவணங்களை முறையான அதிகாரிகளிடமிருந்து பெற்று தான் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அவர்கள் எந்த வித குற்றம் செய்யம்வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் , எதிரிகளின் கோரிக்கை நியாமான கோரிக்கையை இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள் சரிவர விசாரணை செய்யாமல் அசா1, அசா2ன் கோரிக்கையின் பேரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம் – கனிமொழி., L.L.M,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.